# காங்கேசனில் ஒரு அதிகாரி, இரு சிப்பாய்கள் பலி!

★ விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 20 இதழ் 150
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 04 - 7 - 1995

## நேற்று நண்பகல் சம்பவம்

(கொழும்பு)
காங்கேசன் துறையில் வெடி மருந்துகளை ஏற்றிச் சென்ற இராணுவ கனரக வாகன மொன்று தீப்பற்றியதில் ஒரு இராணுவ அதிகாரியும் இரண்டு சிப்பாய்களும் பலியானார்கள்.

நேற்று நண்பகல் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக 'ரூபாவாஹினி' நேற்றிரவு தெரிவித்தது.

வாகனம் தீப்பற்றியதைய டுத்து அதில் இருந்த வெடி பொருட்கள் வெடித்ததினு லேயே படையினர் கொல்லப் பட்டனர். கே-கி

## ஆனையிறவு மோதலில் இராணுவ அதிகாரி பலி

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாமை அண்மிய உடையார்துறை என்னும் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொலலப்பட்டதாகவும், மற்றுமொரு சிப்பாய் காயமடைந்ததாகவும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் மாலை இத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது -கி

## ★ விடுதலைப் புலிகள்

# கிழக்கில் நேற்று நடத்திய அதிரடி தாக்குதலில் 9 இராணுவம் பலி!

## ஏனையோர் தப்பியோட்டம்; ஆயுதங்களும் மீட்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் தெருவெட்டை என்னுமிடத்தில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் ரோந்து சென்ற இராணுவ அணி மீது மேற்கொண்ட அதிரடி தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இராணுவத்திடமிருந்து பல ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

நேற்றுக் காலை 7-20 மணியளவில் 78ம் கிராமம் இராணுவ முகாமிலிருந்து புல்லுமலையை நோக்கி ரோந்து சென்ற பதினெட்டுப் பேரடங்கிய இராணுவ அணியே தெருவெட்டை என்னுமிடத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

இத் தாக்குதலின்போது ஒன்பது இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். இத் தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. -கி

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

[மட்டக்களப்பு]
தெருவெட்டையில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கி 1
- ★ ரி 56 2 ரக துப்பாக்கிகள் - 2
- ★ ரி 56 ரக துப்பாக்கி 1
- ★ ரி 56 ரக துப்பாக்கிகள் - 5
- ★ ஏ கே துப்பாக்கி ரவைக்கூடுகள் - 24
- ★ அதற்குரிய ரவைக்கூடு தாங்கி அணிகள் - 2
- ★ நடுத்தரரவைகள் - 610
- ★ ஏ. கே. துப்பாக்கி ரவைகள் லிங்குடன் -300
- ★ ரம் ரவைச்கூடு - 1
- ★ கிற்பாக் - 3, மழைக் கவசம் - 2, தலைக்கவசம் -1

கே-கி

## ஒரு போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)
தெருவெட்டை தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி 2ம் லெப்ரினன்ற் கணேசமூர்த்தி அல்லது ரமேஷ் (சின்னத்துரை சசிகுமார், மட்டக்களப்பு) வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தங்கள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். கே கி

## பாரிய தாக்குதல் தொடுக்க இராணுவ அதிகாரிகள் அரசுக்கு வற்புறுத்தல்

(கொழும்பு)
வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை எடுப்பது குறித்து பாதுகாப்பு கவுன்ஸில் இவ்வாரம் முடிவெடுக்குமென கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக புலிகள் நடாத்தி வரும் தாக்குதல்களைத் தொடர விடாமல் தடுக்க வடபகுதி மீது பாரிய தாக்குதல் ஒன்றை உடனடியாக நடாத்த வேண்டும் என கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் உயர் இராணுவ அதிகாரிகள், ஜனாதிபதி சந்திரிகாவையும் பிரதி பாதுகாப்பு அமைச்சரையும் வற்புறுத்தியுள்ளனர்.

இத் தாக்குதல் பற்றி இவ்வாரம் நடைபெறவுள்ள பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் தீர்மானிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கெதிராக ஐந்து மாத கால தொடர்ச்சியான பாரிய

(6-ம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் ஊர்திகள் இன்று வீதி வலம்

(யாழ்ப்பாணம்)
கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு கரும்புலிகளின் ஊர்தி பவனி வடமராட்சிக் கோட்டத்தில் இன்று செவ்வாய் காலை 9மணிக்கு உடுத்துறைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி கடற்கரை வீதி வழியாக காலை 10மணிக்கு தாளையடியை வந்தடையும் அங்கிருந்து புறப்பட்டு காலை 11மணிக்கு மாமுனையை வந்தடையும், அங்கிருந்து புறப்

(2ம் பக்கம் பார்க்க)

## மனைவி தமிழராகையால் தளபதி தகுதியற்றவராம்

(கொழும்பு)
யுத்த தந்திரங்கள் எதுவும் தெரியாது, படையினரின் நிலைப்பாடுகள் பற்றி புரியாது விவேகத்திற்கு இடையூறாக இருக்கும் இராணுவத் தளபதியை உடனடியாக பதவியில் இருந்து அகற்றவேண்டும் என்று வடக்கு கிழக்கில் படையினர் கூறியுள்ளார்கள் என 'திரிசூலே' என்ற பத்திரிகை தெரிவித்துள்து.

யுத்தம் ஆரம்பித்து பல மாதங்கள்சென்றும் இராணுவ தளபதி வடக்கு கிழக்குக்குச் சென்று எந்த முகாமையும் பரீட்சித்து பார்க்கவில்லை.

தமிழ்ப் பெண் ஒருவரைத் திருமணம் செய்திருப்பதால் யுத்தத்தை வடக்கு கிழக்கில் தொடர்வதை அவர் விரும்பவில்லையெனவும் அவர் தகுதியற்றவரெனவும் 'திருசூலே' பத்திரிகை தெரிவித்துள்ளது ம-கி

## குடாநாட்டு வான்பரப்பில் விமான நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டு வான் பரப்பில் பலநாள் இடைவெளியின் பின்னர் கடந்த இரு தினங்களாக விமான நடமாட்டம் அதிகரித்துள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் விமானங்கள் அடிக்கடி பலாலிக்கு வருவதும் போவதுமாக இருந்தன.

விமானங்கள் கடல்பகுதியையே தமது போக்குவரத்துக்குப் பயன்படுத்தின. எனினும் விமானங்களின் ஓசையை தென்மராட்சி உட்பட குடாநாட்டின் பல பகுதிகளிலும் செவிமடுக்கக்கூடியதாக இருந்தது. கி

## வடமராட்சியில் நேற்று கடற்படை அட்டகாசம்

## ஒரு மீனவரைக் காணவில்லை

(வடமராட்சி)
நேற்று அதிகாலை வடமராட்சி கடல் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு மீனவர் காணாமல் போயுள்ளார், மீனவர்களின் படகுகளும் வலைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை மூன்றுமணியளவில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கும் காங்கேசன் துறைக்குமிடையே ரோந்து சென்ற கடற்படையினரே பொலி

(6ம் பக்கம் பாக்க)

# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் பின்வரும் பதவிகளுக்கு தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் 1995-07-15ந் திகதி வரை தமிழீழ காவல்துறை, பழைய பூங்கா அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும், ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## (01) உப பரிசோதகர் தரம்:

1. வயது: 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை:
   க. பொ. த. (சாதாரண தரத்தில்) ஆறு பாடங்கள். தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உயர்தரம்)
3. உயரம்: 5' 6"க்கு மேல்.

## (02) காவலர் தரம்:

1. வயது: 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை;
   க. பொ. த. (சாதாரண தரத்தில்) தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தி,
3. உயரம்: 5' 6''க்கு மேல்.

## (03) வரவேற்பாளர்:

1, வயது: 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை:
   க. பொ. த, (சாதாரண தரம்) 6 பாடங்களில் தமிழ், கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி. ஆங்கிலத்தில் விசேட சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.
3. அனுபவம்: தமிழ், ஆங்கிலம் நன்கு பேசக்கூடியவராகவும், அரச/தனியார் நிறுவனங்களில் வரவேற்பாளராக 2 வருடம் கடமையாற்றிய அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் நன்று.

## (04) எழுதுவினைஞர்:

1. வயது. 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை:
   க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உயர்தரம்).
3: அனுபவம்: அரச/தனியார் நிறுவனங்களில் எழுதுவினைஞராக இரண்டு வருடங்கள் கடமையாற்றிய அனுபவம்.

## (05) கணக்கியல் எழுதுவினைஞர்

1. வயது. 18-35வரை
2. கல்வித்தகமை:-
   (1) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் 6 பாடங்களில் தமிழ், கணிதம்/எண்கணிதம் வர்த்தகம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி.
   (2) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் வர்த்தகம், கணக்கியல், பொருளியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரு பாடங்களில் சித்தி.
1. அனுபவம்:-
   அரச/தனியார் நிறுவனங்களில் கணக்கியல் எழுதுவினைஞராக இரண்டு வருடம் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

## (06) தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்

1. வயது:- 18 - 35 வரை
2. கல்வித்தகைமை:-
   க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் 6 பாடங்களில் தமிழ், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி
3. அனுபவம்:-
   அரச/தனியார் நிறுவனத்தில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளராக குறைந்தது இரண்டு வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

## (07) சாரதிகள்

1. வயது:- 18 - 35 வரை
2. கல்வித்தகைமை:-
   8ம் வகுப்பு சித்தியுடன் சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
3 அனுபவம்:-
   5 வருடத்திற்கு குறையாத காலம் சாரதியாக கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்

நன்றி

**பொறுப்பாளர்**
**தமிழீழ காவல்துறை**

(சி-5064)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 07 - 04

செவ்வாய் இரவு

8-02 கரும்புலிகள் நாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி. கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய 'சத்தியத்தின் சுவர்கள்'
8-30 செய்திகள்
8 40 கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய 'திட்டங்கள்'
8-50 தாயகப் பாடல்கள்

1995–07–05

புதன் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகை செய்திகள்- அதனைத் தொடர்ந்து
8-00 மணி வரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–07–04

செவ்வாய் மாலை

5-00 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 தமிழிசை
5-30 வானொலி மதியூகம்
6-00 சிந்தனைக்கு சில விளுடிகள்
6 02 இவ்வாரம் இவர்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 என் தெரிவு
6-30 நிகழ்ச்சிகள் நிறைவு

## இன்று

(குருநகர்)

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் பரிசளிப்பு விழா இன்று 4ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ப. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும். 154

0 0

(கொழும்புத்துறை)

யாழ் நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி (பேச்சி அம்பாள்) ஆலய வருடாந்த 1008 சங்காபிஷேகம் விசேட பூசை, ஆராதனை வழிபாடுகள் இன்று 4ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் இடம் பெறும். 154

0 0

(நெல்லியடி)

புலோலி வடகிழக்கு உத்திராவத்தை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய ஆனிஉத்தரப் பொங்கல் விழா இன்று 4ம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும்

0 0

(உடுவில்)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளின் கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் இன்று 4ம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும். 109

0 0

(அரியாலை)

வடலியடைப்பு புதருனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மணவாளக் கோல உற்சவம் இன்று 4ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும். 59

0 0

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளையொட்டி தீவகக் கோட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட அரங்கப் போட்டிக்கான பரிசளிப்பு விழா யாழ், வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று 4ம் திகதி மாலை 7.30 மணிக்கு நடைபெறும்.

## கரும்புலிகள்

1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு நண்பகல் 12மணிக்கு நாகர்கோவிலில் வந்தடையும். அங்கிருந்து புறப்பட்டு நண்பகல் 12.30 மணிக்கு அம்பன் வந்தடையும் அங்கிருந்து பகல் 1மணிக்கு குடத்தனை கடற்கரையை வந்தடையும் பின்னர் அங்கிருந்துபுறப்பட்டு பி ப 2மணிக்கு மணற்காடு கடற்கரையை வந்தடையும் அங்கிருந்து புறப்பட்டு பி.ப 3மணிக்கு மந்திகை வந்தடையும். அங்கிருந்து புறப்பட்டு பி.ப 3-15 மணிக்கு கலிகைச் சந்தியை வந்தடையும், அங்கிருந்து மாலை 4மணிக்கு நெல்லியடி வந்தடையும். அங்கிருந்து புறப்பட்டு மாலை 4-30 மணிச்கு குஞ்சர் கடையை வந்தடையும். அங்கிருந்து புறப்பட்டு மாலை 5-30 மணிக்கு உடுப்பிட்டி வந்தடையும் அங்கிருந்து புறப்பட்டு மாலை 6மணிக்கு வல்வெட்டித்துறையை வந்தடையும், அங்கிருந்து புறப்பட்டு இரவு 7மணிக்கு கடற்கரை வீதி வழியாக கெருடாவில் வந்தடையும். அங்கிருந்து மீண்டும் வல்வெட்டித்துறை வழியாக இரவு 8-30 மணிக்கு பொலிகண்டியை வந்தடைந்து ஊர்தி தரித்து நிற்கும்.

நாளை புதன்கிழமை பொலிகண்டியில் இருந்து ஆரம்பமாகி காலை 8-30மணிக்கு நவிண்டில் சந்தியை வந்தடையும் அங்கிருந்து புறப்பட்டு காலை 9மணிக்கு மாலிசந்தியை வந்தடைந்து பின்பு காலை 10மணிக்கு 1ம் கட்டையை வந்தடையும். அங்கிருந்து கடற்கரை வீதி வழியாக காலை 10-30 மணிக்கு இன்பருட்டி வந்தடையும். அங்கிருந்து பகல் 11 மணிக்கு சக்கோட்டையை வந்தடையும்- அங்கிருந்து புறப்பட்டு பகல் 11-30 மணிக்கு திக்கம் வத்தடைந்து அங்கிருந்து புறப்பட்டு நண்பகல் 12மணிக்கு வதிரி வந்தடைந்து காவல்த்துறை பணிமனை முன்பாக ஊர்தி தரித்து நிற்கும்.

பின்பு இவ்விடத்தில் இருந்து 'கரும்புலிகள் நாள், கூட்டம் நடைபெறும்- நெல்லியடி மகாவித்தியாலயத்திற்கு சென்றதும் மக்களின் அஞ்சலிக்காக திறந்து வைக்கப் படும். கி

## யாழ் நகரில்

கரும்புலி நாள் ஊர்தி இன்று யாழ். நகரில் ஊர்வலமாகச் செல்லும் பாதை விபரம் வருமாறு.

பி.ப 2க்கு யாழ் செயலகச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி கண்டி வீதிவழியாகப் புங்கன் குளம் சந்தியை பி ப 2-15 மணிக்கு அடைந்து புங்கன் குளம் வீதியூடாக பாஷையூரைப் பி ப 2.30க்குப் போய்ச் சேர்ந்து கடற்கரை வீதியூடாகக் குருநகர் ச. ச. நிலைய முன்றலை பி. ப 2-50 க்கு அடைந்து அங்கு கூட்டம் நிறைவு பெற சின்னக்கடையூடாக யாழ் மருத்துவமனை வீதி வழியாகப் பழைய பேருந்து நிலையத்தை பி.ப 3-15 மணிக்கு அடையும்-

இங்கும் கூட்டம் முடிவுற லெப். கேணல் சந்தோஷம் வீதியூடாக வின்சர் தியேட்டர் சந்தியால் அருச்சுனு வீதி வழியாக மானிப்பாய் வீதியை பி-ப 3-30 க்கு அடைந்து தொடர்ந்து ஐந்து சந்தி- ஒட்டுமடம்- ஆறுகால்மடம் ஆனைக்கோட்டைச் சந்தியை மாலை 4மணிக்கு அடைந்து நவாலி வீதியால் திரும்பி நவாலி வட்டுக்கோட்டையில் மாலை 4-30 க்குக் கூட்டம் நிறைவுறச் சித்தங்கேணிச் சந்தி சங்கானைச்சந்தியை மாலை 5மணிக்கு அடையும்.

[5-ம் பக்கம் பார்க்க]


## தமிழ் தட்டெழுத்தாளர்

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. ஆங்கில தட்டெழுத்தில் அனுபவமும் க. பொ. த உயர்தரத்தில் சித்தியும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும் விருப்புவோர் தமது சொந்தக் கையெழுத்தில் 5-7-95 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

(ஏ-5053)

## விற்பனை முகவர் தேவை

### தொண்டமானாறு

'ஈழநாடு' பத்திரிகை விறபனை செய்வதற்கு தொண்டமானாறுப் பகுதிக்கு விற்பனையாளர் தேவை. முற்பணம் கட்டக கூடியவர்கள் மட்டும் நேரில் வரவும்.

**விநியோக முகாமையாளர்,**
ஈழநாடு நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(எ 5062)

ஸ்ரீதர் அகலத் திரையில்
2-30 காட்சியாக
ஞானரதனின்

## முகங்கள்

(சமூகச் சித்திரம் கலர்)

நிதர்சனத்தின் சிறப்பு வெளியீடு
4-30 காட்சியாக
கடற்கரும்புலிகளின் வீரசாதனை

**உயிராயுதம் பகுதி - 3**

6-30 காட்சியாக

**மே ஒளிவீச்சு - 95**

(ஏ-5065)

### மணிவாக்கு

நண்டு பக்கவாட்டில் தான் நடக்கும்; மீன் மிதந்தபடியே தான் தூங்கும். குதிரை நின்ற படியேதான் ஓய்வெடுத்துக்கொள்ளும். வஞ்சகர் நெஞ்சில வஞ்சம் மட்டும் குடிகொண்டிருக்கும்.

- கண்ணதாசன்

# இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு தனித் தமிழ் ஈழம் மட்டுமே!

## வை. கோபாலசாமி கூறுகிறார்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு தனித் தமிழ்ஈழம் மட்டுமே என ம, தி. மு. க. செயலாளர் திரு. வை. கோபாலசாமி உறுதிபடக் கூறியுள்ளதாக பி. ரி. ஐ. செய்தி தெரிவித்துள்ளது.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கை இராணுவத்திற்கு ஆதரவாக இந்தியப் படையை அனுப்பும் திட்டத்தை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். இந்தியப் படை அங்கு செல்லுமானல் அதுமுழுத் தமிழ் இனத்துக்குமே அழிவாக முடியும்

உலகில் தமிழினம் தனித்துவமாக வாழவேண்டுமானல் அதற்கு நாம் விடுதலைப் புலிகளின் ஈழப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும். இதைக்கூட செய்யமுடியாவிடில் நாம் தமிழர் என்று கூறும் தகுதியையே இழந்துவிடுவோம்.

திரு. பிரபாகரன் தலைமையில் ஈழத்தில் நடக்கும் போராட்டத்திற்காக எமது கட்சி எத்தகைய தியாகங்களையும் செய்யத் தயாராயுள்ளது எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் நடைபெற்ற ம. தி. மு. க. மாநாட்டில் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு முழு அளவில் ஆதரவழிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தெரிந்ததே. (சி)

### உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் கோவில் மகோற்சவம் நேற்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

11 ம் திகதி செவ்வாய்க்கிழமை ரதோற்சவமும், 12 ம் திகதி புதன்கிழமை தீர்த்த தோற்சவமும் இடம்பெறும். இவ் உற்சவகாலத்தில் சிவத் தமிழ்வித்தகர் சிவமாகலிங்கம் தினமும் தெய்வீகப் பேருரை நிகழ்த்திவருகின்றார். - ர

## நமது நோக்கு

### மனித உரிமை மீறல்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வருமுன் தேர்தல் வாக்குறுதிகளாக மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் பத்திரிகைச் சுதந்திரம் பிரசுரிக்கும் சுதந்திரம் பேணப்படும் என்றெல்லாம் கூறியது. இந்த அரசு பதவிக்கு வந்தபின் எத்தனை பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கெதிரான நடவடிக்கைகள் எதுவும் எடுபடவில்லை.

தற்போது சடலங்கள் தினமும் ஆறுகள் வாவிகளில் மிதக்கின்றன. அவற்றில் அதிகமானவை தமிழர்களினது என்று சொல்லப்படுகிறது. இதைத்தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்கிறதா என்றால் இல்லை. காரணம் அரசும் இதன் பின்னணியில் இருப்பதாகும்.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பேசிய முன்னாள் சபாநாயகர் எம். எச். முகமத் தன்னுடைய வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு பிரதமர் சிறிமாவோவின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்ட ஜீப் வண்டி பாவிக்கப்பட்டதாகவும் முறையிட்டுள்ளார். தனது வீடு தாக்கப்பட்டது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றுகூறிய அவர் தனது உயிருக்கே ஆபத்து ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் கூறியுள்ளார். தாங்கள் ஆட்சியிலிருக்கும்போது மற்றவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களை பார்த்துக்கொண்டு வாழாவிருந்தவர்கள் இப்போது வாள் வாள் என்று கத்துவதற்கு உரிமையற்றவர்களேயானலும் உண்மையில் இந்த அரசாங்கத்தின் கீழ் மனித உரிமைகள் மீண்டும் கால்களுக்கு அடியில் போட்டு மிதிக்கப்படுகின்றன என்பது உண்மை.

கொழும்பிலும் மற்றும் சிங்களப் பகுதிகளிலும் அப்பாவி தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும், அவற்றைப் பற்றி எவருக்கும் முறைப்படமுடியாத நிலையும் திட்டமிட்டு அரசின் ஆசீர்வாதத்துடன் தான் இவைகள் நடைபெறுகின்றது என்பதை நிருபிக்கிறது,

ஆறுகளிலும் வாவிகளிலும் மிதக்கும் சடலங்கள் பட்டினி போடப்பட்டு வாடச்செய்து பின்னர் கை, கால்கள் கட்டப்பட்டு நீரில்போட்டு மூழ்கடிக்கப்பட்டவர்களின் சடலங்களாக வைத்திய பரிசோதனைகளின்போது காணப்படுகின்றன. அளவைப்பகுதியில் உள்ள ஏரி ஒன்றில் மீட்கப்பட்ட ஐந்து சடலங்கள் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டோரின் சடலங்களாக காணப்பட்டன. வெவ்வேறு இடங்களில் கொல்லப்பட்டதாக கருதப்படும் இந்த இளைஞர்களின் சடலங்கள் அளவைப்பகுதியில் போடப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர் இவைகளும் தமிழர்களின் சடலங்கள் என்று ஊகிக்கப்படுகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் கொல்லப்படும் சிங்கள இராணுவத்தினருக்காக அப்பாவித் தமிழ் பொது மக்கள் வேண்டுமென்று சிங்களப் பேரினவாதத்தால் கொல்லப்படுகின்றனர்.

## ★ மண்டைதீவு படுதோல்வி

# இராணுவ அதிகாரிகள் மூவர் விசாரணைக்கு மண்டைதீவு விரைவு

(கொழும்பு)

மண்டைதீவு தோல்வி பற்றி புலன்விசாரணை நடாத்துவதற்காக இராணுவ உயரதிகாரிகள் மூவர் அடங்கிய குழுவொன்று மண்டைதீவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்

மண்டைதீவில் படையினருக்கு ஏற்பட்ட இழப்பு அரசுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதை யடுத்தே இத்தோல்வி குறித்து புலன் விசாரணை நடாத்த ஜனதிபதி சந்திரிகா உயர்மட்டக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்தக்குழு மண்டைதீவு வந்துள்ளதாகவும் அங்கு நிலைமைகளை நேரில் பார்வையிட்டு விசாரணைகளை நடாத்தி ஜனதிபதி சந்திரிகாவுக்கு உடனடியாகவே அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு படைமுகாம் தகர்ப்பையடுத்து கொழும்பு பத்திரிகைகள் பலவும் அரசையும், பாதுகாப்பு அமைச்சையும் மிக வன்மையாக சாடியுள்ளதுடன் இத்தோல்விக்கு காரணமானவர்கள்மீது உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அரசை வற்புறுத்தியுள்ளன சி

### பலதும் பத்தும்

**"கூரியர்" Courier**

ஐ நா. அமைப்பின் ஒரு பிரிவான கல்வி, விஞ்ஞான கலாச்சார வளர்ச்சி அமைப்பு (யுனெஸ்கோ) 32 மொழிகளில் வெளியிடும் சஞ்சிகையின் பெயர் தான் கூரியர்.

இந்தியாவில் இந்தி, வங்காளம், தமிழ் ஆகியமொழிகளில் மாத்திரமே இந்தச் சஞ்சிகை வெளிவருகிறது. 32 மொழிப் பதிப்புகளிலும் தமிழ் மொழிப் பதிப்பு நான்காம் இடத்தைப் பெற்றிருப்பது தமிழுக்குப்பெருமை தான்!

அறிவியற் சொற்களை உருவாக்கி சிறந்த மொழி பெயர்ப்புக் கட்டுரைகளை வெளியிடுவதால் அதன் ஆசிரியர் மணவை முஸ்தாபாபாராபட்டப்பட்டார் எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில்!

— மயூரன்

# 7 தீவுகளிலுமுள்ள படை முகாம்களை அழிக்குமாறு கடற்புலிகளுக்கு ஆணை

(கொழும்பு)

யாழ் குடா நாட்டில் ஏழு தீவுகளிலும் உள்ள இராணுவ கடற்படை முகாம்களை தாக்க கடற்புலிகள் திட்டமிட்டுள்ளதாக 'சண்டே லீடர்' கூறியுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுகையில்: இதற்கான உத்தரவுகளை கடற்புலிகளின் தளபதி சூசைக்கு திரு. பிரபாகரன் வழங்கியுள்ளார். மேலும் வடபகுதி படை முகாம்களுக்கு படையினரையும், இராணுவ தளபாடங்களையும் கப்பல் மூலம் ஏற்றிச் செல்வதை தடுக்குமாறும் கடற்புலிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது,

இதன் முதற்கட்டமாகவே மண்டைதீவு முகாம் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் மீதான பாரிய தாக்குதலுக்கு படையினர் தீவுப்பகுதிகளை தளமாக பயன்படுத்த புலிகள் சந்தேகிப்பதாலேயே அவர்கள் தீவுப்பகுதிகளிலுள்ள படை முகாம்களை அழிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் படை வட்டாரங்கள்கருதுகின்றன. சி

### இராசி பலன்

**04-07-1995**

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு ஆனி-20]

ஷஷ்டி மு. ப. 10-35 வரை உத்தரம் பி. இ. 5-12 வரை. அமிர்தசித்தயோகம் இராகு காலம் பி ப 2-57 முதல் 4-27 வரை சுபவேளை காலை 10-27 முதல் 11-57 வரை

மேடம்: எதிர்பாராத திருப்பம், பணவரவு, முயற்சி வெற்றி.

இடபம்: கெட்ட சகவாசம் மனக்குறை, அலைச்சல்.

மிதுனம்: பயண கஸ்டம், தொழில் கஸ்டம், வேதனை,

கடகம்: சுபகாரியம், குடும்ப மகிழ்ச்சி, கலந்துரையாடல்.

சிங்கம், சினம்கொள்ளல், மனச்சங்கடம்: கடன்பகை,

கன்னி: வாக்குவன்மை, பெரியோர் ஆதரவு. சுபச் செய்தி.

துலாம்; தொழில்போட்டி, குழப்பமடைதல், குடும்ப கவலை.

விருச்சிகம்: மனநிறைவு, எதிர்பாராத உறவு, தானதர்மம்.

தனுசு: தொழில் பெருமை மறைமுகசெயல். நண்பர் உதவி

மகரம், அதிகாரிகள் சினம். சகோதர வெறுப்பு, அகால உணவு,

கும்பம்: அடிமைநிலை, வீண் யோசனை, தாமத உதவி.

மீனம்: தெய்வசிந்தனை, தொழில் பயம் வீண்கற்பனை

— ஜோஸ்யர்

# கொழும்பில் குண்டு வெடிப்புகளை படையினரே நடத்துகின்றனர்

(கொழும்பு)

"கொழும்பில் குண்டுகள் வெடிப்பதற்குக் காரணம் இராணுவத்தினரே. கிழக்குப் போர்க்களத்திற்குச் செல்ல இராணுவப் பிரிவினருக்கு விருப்பமின்மையால் கொழும்பிற்கு பாதுகாப்புத்தேவை என்ற எண்ணத்தை உருவாக்கவே இவ்வாறான குண்டு வெடிப்புக்களில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்" என கடந்த காலங்களில் சமாதான அமைப்பில் ஈடுபட்ட பௌத்த தேரரான மாதம்பிட்டியே அஸ்ஸ ஜீ தேரர் உறுதியாகக் கூறுகின்றார்.

அண்மைக்காலங்களாக கொழும்பு முழுவதும் இடத்துக்கிடம் வெடிக்கும் சிறு அளவிலான குண்டுகள் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் வெளிவருகின்றன. பெரும்பாலானோர் இக்குண்டுகள் புலிகளால் வைக்கப்படவில்லை எனக் கூறுகின்றனர். இதனையே பௌத்ததேரரும் கூறியுள்ளார்.

ஆனால் இதனை மறுத்த இராணுவ இரகசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் இக்குண்டுகள் புலிகளால் வைக்கப்பட்ட குண்டுகளே. இவ்வாறு குண்டுகள் வைப்பதினூடாக வடபகுதிக்கு வரும் இராணுவப் பிரிவுகளின் அளவைக் குறைப்பதே அவர்களின் நோக்கமாகும் என்று கூறியுள்ளார். ர சி

# மண்டைதீவில் தாக்குதலுக்கு முன் கவசவாகனங்கள் இடமாற்றப்பட்டன

(கொழும்பு)

மண்டைதீவு முகாம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் என புலனாய்வுத்துறையினர் அறிவித்தபோது அங்கிருந்து கவச வாகனங்கள் பல ஊர்காவற்துறைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

இந்த புலனாய்வுத் தகவலை தற்போது புலனாய்வுப்பிரிவு தலைமைப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிரிகேடியர் சாந்த கொட்டகொட இராணுவ தலைமைப்பீடத்திற்கு தெரிவித்திருந்தார்.

மண்டைதீவை புலிகள் தாக்கப்போவதாக புலனாய்வுத்தகவல்கள் தெரிவித்த போதும் இராணுவ தலைமைப்பீடம் அதை அலட்சியம் செய்துவிட்டது. தற்போது புலனாய்வுத் தலைமைப்பதவியிலிருந்து பிரிகேடியர் கொட்டகொட அகற்றப்பட்டுள்ளார். இவர் இத்துறையில் மிகத்திறமை வாய்ந்தவராக இருந்தபோதும் பதவி நீக்கப்பட்டமையானது படை வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மண்டைதீவு முகாம் தாக்கப்படுமென இத் தாக்குதல் நடைபெறுவதற்கு நான்கு

(5-ம் பக்கம் பார்க்க)

### ★ மண்டைதீவை விடுதலைப் புலிகள் தாக்கியபோது

# நித்திரையிலிருந்து எழுந்தபடையினர் கால்போனதிசையில்ஓடத்தொடங்கினர்

(கொழும்பு)

மண்டைதீவ இராணுவ முகாமை புலிகள் அதிகாலை 2-30 மணியளவில் தாக்கியபோது அங்கிருந்த படையினரில் பெருமளவினருக்கு அங்கு என்ன நடக்கிறது என்று தெரியாமல் படுத்த படுக்கையிலிருந்து எழுந்து தலைதெறிக்க ஓடியதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுகையில்: புலிகள் முகாமை தாக்கிய போது அங்குஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் இருந்தனர். தீவுகளை புலிகள் தாக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் காவலரண்களில் இருந்தவர்களை தவிர ஏனையோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர் இதனால் புலிகளின் தாக்குதல் ஆரம்பித்தவுடன் அவர்கள் செய்வதறியாது திகைத்தார்கள்.

இரு மணிநேரத்துள்புலிகள் முகாமை கைபபற்றிவிட்டனர் புலிகள் தமது தாக்குதலுடன் ஆயுதக் களஞ்சியத்தையும் முற்றுகையிட்டனர். தாக்குதல் ஒருபுறம் நடக்க ஒருபகுதியினர் மளமளவென்று ஆயுத பெட்டிகளைபடகுகளில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு கொண்டு போய்ச்சேர்த்தனர். இந்த ஆயுதங்களின் பெறுமதி 600 லட்சம் 6கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது,

சுமார் 10 மணி நேரம் மண்டைதீவிலிருந்து அவர்கள் பாரிய ஆயுதங்களை (ஆட்லறி[ எடுத்துச் செல்ல முயன்றனர். அது முடியாமல் போக அதனை வெடிவைத்து அழித்துள்ளனர். இராணுவத்தினர் தங்கியிருந்த கட்டிடங்களை தகர்த்தனர். 25க்கும் மேற்பட்ட கனரகவாகனங்களை குண்டு வைத்து நீர்மூலமாக்கியதுடன் தீ வைத்தும் சாம்பராக்கினர்.

இந்த 10 மணி நேரத்தில் விமானப்படை உதவிக்கு வரவேயில்லை. கடலுக்கு மேலாக பறக்கவுமில்லை. புலிகளின் விமானப்படை இலங்கை விமானப்படையை எதிர்த்து தாக்குவது எப்படி என்பதை பரீட்சித்துப்பார்க்க தயாராக வைக்கப்பட்டிருந்தது. புலிகளின் கடற்படையில் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் பொருத்தப்பட்டு அவை மண்டைதீவை சுற்றி தீவிர மராந்தில ஈடுபட்டிருந்தன.

இலங்கை கடற்படையோ முகாம்களை விட்டே வெளியில் வரவேயில்லை நிர்க்கதியான நிலையில் இருந்த மண்டைதீவு முகாமைச்சேர்ந்த 110 க்கும மேற்பட்ட படையினர் உயிரிழந்ததுடன் 20 க்கும் மேற்பட்டோர் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

இவ்வளவும் நடந்துகொண்டிருக்கையில் அருகிருந்த ஊர்காவற்துறை முகாமிலிருந்து படையினர் உதவ முன்வரவில்லை. புலிகள் தடைகளை ஏற்படுத்தியதால் தங்களால் இது முடியவில்லை என அவர்கள் கூறுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# மனநோயால் பாதிக்கப்பட்ட பிரிகேடியருக்குப் பதவி உயர்வு

(கொழும்பு)

பிரிகேடியர் நிலைக்கு பதவி உயர்வு பெற்றுள்ள இலங்கை இராணுவ சேவைப் படைப் பிரிவின் எச். ஆர். எஸ். பெரேரா முன்பு மனநோயாளர் எனக் கருதப்பட்டு இராணுவ சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு நபர் எனக் கூறப்படுகிறது.

அமைச்சரொருவரின் தங்கையைத் திருமணம் செய்துள்ளதைக் கருத்திலெடுத்தே கம்பஹா மாவட்ட அமைச்சரொருவரின் சிபாரிசின் பெயரில் இப்பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

முன்பு மூவாயிரம் ரூபா ஓய்வூதியத்திற்கு உரிய அவர் தற்போது இப்பதவி உயர்வுடன் பத்தாயிரம் ரூபா ஓய்வூதியத்திற்கு உரியவராக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவரை விட தற்போது மேஜர் ஜெனரல் பதவிக்குத் பதவியுயர்வு பெற்றுள்ள கேணல் பலித் பெர்ணண்டோ ஐ. தே. க ஆட்சிக் காலத்தில் இராணுவத் தளபதிகளின் எதிர்ப்பினால் இராணுவத்தை விட்டு விலகியவராம்,

அமைச்சர் அனுருத்தரத்வத்தையின் இணைபபதிகாரியான பிரிகேடியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள கப்டன் ஹிரன் ஸ்ரீலங்கா இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்,

பிரிகேடியர் நிலைக்கு உயர்த்தபட்டுள்ள இலங்கை இராணுவப்பொலிசின் மேஜர் ரீ. டி ராஜபக்ஷவும் இராணுவசேவையிலிருந்து ஓய்வில் சென்றவர், என்வும் குறிப்பிடப்படுகிறது.

இப்பதவி உயர்வு வழங்குதலில் காணப்படும் ஊழலும், பாரபட்சம் காட்டும்தன்மையும் இராணுவ அதிகாரிகளுக்கு அதிருப்தியைதிகொடுத்துள்ளது. அரசின் இச்செயலுக்காக அவர்கள் தமது கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர். ர-சி

# பதவி நீக்கப்பட்ட பிரிகேடியர் மீண்டும்புலனாய்வுபிரிவுதலைவரானார்

(கொழும்பு)

இராணுவ உளவுப் பிரிவின் தலைமைப் பதவியிலிருந்து அகற்றப்பட்ட பிரிகேடியர் சுல செனிவிரத்ன மீண்டும் அப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இவருக்கு பதிலாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பிரிகேடியர் சரந்த கொட்டகொட மண்டைதீவில் படையினருக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளார். புலனாய்வுத் துறையின் திறமையின்மையே மண்டைதீவில் படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்புக்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரிகேடியர் சுல செனிவிரத்ன அமெரிக்க பயணத்தின் போது அமெரிக்க பெண் ஒருவரை முத்தமிட்ட குற்றத்திற்காக பதவி நீக்கம் செய்யப்பட்டார் தற்போது மண்டைதீவு படுதோல்வியை அடுத்து இவர் மீண்டும் பழைய பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். சி

# நிவாரணம் வழங்குமாறு மீனவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கரையோரப பகுதி மக்களுக்கு இலவச நிவாரணத்தை பெற்றுத் தருமாறு கரையோரப் பகுதி மக்கள் யாழ். பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர்.

மண்டைதீவு பகுதியிலிருந்து இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல்தாக்குதலைநடத்திவருவதாலும் கடற்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதாலும் மீனவர்களின் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட கடற்கரையில் வசிக்கும் மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் கரையோரப்பகுதி மக்கள் பெரும் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே மீண்டும் தங்களுக்கு இலவச நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் யாழ் பிரதேச செயலரைக்கேட்டுள்ளனர். 170-சி

## தெற்கில் கடந்த வருடம்

# 45,392 வீதி விபத்துக்களில் 1,405பொதுமக்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

தென் பகுதியில் கடந்த வருடம் 45,392 வீதி விபத்துக்களில் 1,405 பேர் உயிரிழந்ததுடன் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். சிறு காயங்களுக்குள்ளானோர் தொகை கணக்கிலடங்காது எனவும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது

தெற்கில் தற்போது தினமும் 114வீதிவிபத்துகள் நடைபெறுகின்றன. இவற்றில் 5 விபத்துக்களில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இவ்விபத்துக்களால் அங்கவீனமடைவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

பெரும்பாலான விபத்துக்கள் பட்டினங்களிலேயே இடம் பெறுகிறது. இவ்விபத்துக்களை குறைக்கும் நோக்கில் பொலிசார் இம்மாதம் முதல் கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர். போக்கு வரத்து ஒழுங்கு வசதிகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளனர். இவ் விதிகளை மீறுவோர் மீது கூடிய தண்டப் பணம் அறவிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் கொழும்பு நகரப் பகுதியில் இடம்பெற்ற இரு பாரிய விபத்துக்களில் நால்வர் உயிரிழந்ததுடன் 30 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். -சி

# திரையரங்குகளை மூடி எதிர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சினிமாத் தியேட்டர்களை இரண்டு நாட்களுக்கு மூடி எதிர்ப்புத் தெரிவிப்பதென்றுதியேட்டர்களின் சொந்தக்காரர்கள்தீர்மானித்துள்ளனர்.

தியேட்டர் சொந்தக்காரர்களுக்குசில அடிப்படை உரிமைகளை, திரைப்படக் கூட்டுத்தாபனம் வழங்க மறுத்துவருவதாலேயேஇவர்கள் இன்று 4ம் திகதியும், 9ம் திகதியும் திரையரங்குகளை மூடி எதிர்ப்புத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளனர்.

பல மாதங்களாக கோரிக்கைகளை முன்வைத்தும், அதை நிறைவேற்றாது பாராமுகமாக திரைபடக் கூட்டுத்தாபனம் செயற்பட்டு வருகின்றதென்றும் தியேட்டர் சொந்தக்காரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ம-சி

# றோட்டறிக் கழகத்தின் புதிய அங்கத்தவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டறிக் கழகத்திற்கான புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 55 வது வருடத்துக்கான இவ் அங்கத்தவர்கள் இம்மாதம் முதல் தம் பதவிகளுக்கான பொறுப்புக்களை ஏற்பர்.

றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவராக சட்டத்தரணி க. கேசவனும் செயலாளராக வைத்திய கலாநிதி க. விவேகானந்தனும், பொருளாளராக ராஜன் பூபால சிங்கமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கழக சஞ்சிகையின் ஆசிரியராக பி. செல்வநாதனும் பொறுப்பு நடத்துனராக கே. நடேசனும் இயக்குனர்களாக சமூக சேவைக்கு எம். இராஜேந்திரனும் இளைஞருக்கு கே. சிறிபதியும் தொழில் சார்புக்கு எஸ் பாஸ்கரனும் கழகத்திற்கு கே. சுந்தரேசனும் சர்வதேச இயக்குனராக வி. ரி. சிவலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ர-சி

# சுவாசத்தை இலகுவாக்கும் கருவி தமிழ் டாக்டரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

போதியளவு வளர்ச்சியடையாமல் பிறக்கும்குழந்தைகள் சுவாசிப்பதற்கு உதவும் சாதனம் ஒன்றை இலங்கைத் தமிழ் டாக்டர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

கலிபோர்னியா மற்றும் சான்பிரான்ஸிஸ்கோபல்கலைக்கழகங்களில் குழந்தை மருத்துவத்துறை பேராசிரியராகப் பணிபுரியும் டாக்டர் விக்னேஸ்வரன் என்பவரே 'சேர்பி' என அழைக்கப்படும் இக்கருவியைக் கண்டுபிடித்துள்ளார்.

குறிப்பாக மிகக்குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சுவாசிப்பதை இலகுவாக்க இக்கருவி உதவியளிக்கும்.

வளர்ச்சியடைந்த வளர்முக நாடுகளிலுள்ள வைத்திய சாலைகளில் தற்பொழுது பயன்படுத்தப்படும் இவ் நவீன கருவியை யப்பானிய அமைப்பொன்று இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான இவ் உபகரணம் கொழும்பு காசில் வைத்தியசாலையில் நேற்று திங்கட்கிழமை முதல் செயற்படுகிறது.

இக்கருவியை எவ்வாறு இயக்குவது என்பது குறித்து பயிற்சி வழங்குவதற்காக டாக்டர் விக்னேஸ்வரன் தற்பொழுது கொழும்பு வந்துள்ளார். இ சி

புவிச்சூழல் காக்க எழுவோம் - அதற்கொரு போர் ஒன்று தொடுக்க விழைவோம்.

# புலனாய்வுத் துறையை ஏமாற்றிய புலிகள் மண்டைதீவில் பாரிய அழிவை ஏற்படுத்தினர்

(கொழும்பு)

சுமார் 50 நடுத்தர மீன்பிடி விசைப்படகுகளை விடுதலைப் புலிகள் ஒட்டு மொத்தமாகச் சேகரித்து வைத்திருந்தனர் என்ற விடயத்தை கடற்படையினர் சில மாதங்களுக்கு முன்பே தெரிந்திருந்தனர் புலிகளின் கடற்பிரிவு இவற்றைப் பயன்படுத்தி பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகின்றது என்பதையும் இதிலிருந்து ஊகித்திருக்கலாம் என 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும்கூறுகையில்; இக்கடற்படை அணியின் தாக்குதல், இலக்குகளில் மேற்குக்கரையிலுள்ள கொழும்புத் துறைமுகமே பெருமளவு முக்கியத்துவம் பெற்றிருக்கலாமெனக் கருதப்பட்டதால் கடற்படையினர் அதிகளவு கண்காணிப்பை கொழும்புத் துறைமுகத்தின் மீதே செலுத்தினர்.

தீவகத்தில் மண்டைதீவு ஒரு இராணுவ முகாமுக்கான பல பாதுகாப்பு அம்சங்களை இயற்கையாகக் கொண்டிருப்பதால் கடற்படையினரின் பாதுகாப்பின் இறுக்கம் இத்தீவில் தளர்நதே காணப்பட்டது. தீவின்நிலப்பகுதி பெரும்பாலும் மட்டமானது. அங்கிருந்த பனைகளில் பெரும்பாலானவை தறிக்கப்பட்டு இராணுவத்தினரின் பாதுகாப்புக்கு அரண்களாக மாற்றப்பட்டன. இக்காரணங்களால் இம்முகாம் மீதான தாக்குதல் பெரும்பாலும் சாத்தியப்படாத ஒன்றே எனப் பலராலும் கருதப்பட்டுவந்தது.

இம்முகாமைத் தாக்கும் நோக்கில் புலிகள் மண்டைதீவை நெருங்குவதே கடினமாகும். ஊர்காவற்றுறையையும் இதனையும் இணைப்பது அல்லைப்பிட்டிப்பாதை. ஊர்காவற்றுறையும் இப்பாதையும் இராணுவத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் இருந்தது. மண்டைதீவின வடக்கே ஒரு காலத்தில் இயங்கி இப்போது கைவிடப்பட்ட அலுமினியத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இதற்கண்மையில்தான் யாழ் குடாநாட்டை இணைக்கும் பண்ணைப் பாதை முடிவுறுகிறது. தொழிற்சாலையில் நிலை கொண்ட இராணுவத்தினரின் முழுக்கட்டுப்பாட்டில் இப்பாதை முடிவுறும் பகுதியும் இருந்தது. எனவே அல்லைப்பிட்டிப் பாதை, பண்ணைப் பாதை என்பவற்றினூடாக புலிகள் நுழைந்திருக்க முடியாது.

யாழ். ஏரியூடாகவும் அணுகியிருக்க முடியாது. காரணம் இவ் ஏரியானது கடற்போக்குவரத்துக்கு ஏற்றவகையில் ஆழமானது அல்ல.

அவ்வாறாயின் கவசமிடப்பட்ட விசைப் படகுகளில் பூரண ஆயுதபாணிகளான ஆயிரம் விடுதலைப் புலிகள் எங்ஙனம் மண்டைதீவை நெருங்கினர்? முதலில் கிளிநொச்சிக் கரையிலிருந்து புறப்பட்டு மண்டைதீவுககு தெற்கே உள்ள சிறிய தீவுத்திடலான பாலைதீவு ஊடாக உட்புகுந்திருக்கவேண்டும் என்பதே இரா்ணுவ ஆய்வாளர் கருத்தாகும்.

இவ்வாறு செய்து புலனாய்வுத் துறையினருக்கு போக்கு காட்டிவிட்டு விடுதலைப் புலிகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். தரைவழி புலனாய்வுத் துறையினருக்கு விடுதலைப் புலிகள் பற்றிக் கிடைக்கும் தகவல்கள் எதுவும் பிரயோசனமற்றதாகவே இருந்து வருகின்றது. இது இப்படியேபோனால் யாழ் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் இராணுவத்தினர் பேரழிவுக்கே இட்டுச் செல்லப்படுவர்.

புலிகள் மண்டைதீவு இராணுவ முகாமைத் தாக்குவதற்கு அவர்களுக்கு நீண்டகால நோக்கங்கள் இரண்டு இருந்தன ஒன்று அங்கிருந்த கனரக இராணுவ தளபாடங்களை பெருமளவில் கைப்பற்றிக்கொள்வது. மற்றையது இப்பாரிய தாக்குதலால் இடத்துக்கிடம் அரச படையினரின் எண்ணிக்கையில் மாற்றம் நிகழச் செய்வது இரண்டையும் அவர்கள் பெரும்பாலும் நிறைவேற்றிவிட்டனர். -தீ-சி

## மண்டைதீவில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களுக்கு முன்னர் இவர் இராணுவ தலைமைப் பீடத்திற்கு விரிவான அறிக்கை கொடுத்திருந்தார். இதையடுத்தே அங்கிருந்த கவசவாகனங்கள் பல ஊர்காவற்றுறைக்கு கொண்டு செல்லப்பட்டன. -சி

# படை அதிகாரிகள் பலரைவிட புலிகள் மிகத் திறமைமிக்கவர்கள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை போன்று இராணுவ தலைமைப்பீடத்தில் திறமைமிக்க அதிகாரிகள் இல்லாமையே அண்மைக்கால தோல்விகளுக்கு காரணம் என இராணுவ ஆய்வாளர்கள் கூறுவதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

ஆய்வாளர்கள் மேலும் கூறுகையில்: மண்டைதீவில் ஏற்பட்ட நிலைமை இராணுவத்திற்கு ஏற்பட்டதொருபேரிழப்பாகும் இதற்கு காரணம் இராணுவத்தினரிடையே இயற்கையாக உள்ள பலவீனமேயாகும். இந்த திறமை புலிகளிடம் உள்ளது படையினரின் இந்த பலவீனம் சரிப்படுத்த முடியாததொன்று.

மண்டைதீவு முகாம் மீதான தாக்குதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முதலாவது பாரிய தாக்குலாகும். இந்நிலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொண்டர் படையை எப்படி முக்கிய இராணுவ முகாம்களின் முன்னணி நிலைகளில் நிறுத்த முடியும்.

வடக்கிலுள்ள படைமுகாம்களில் நிலைகொண்டுள்ளபடையினர் பலர் போதிய பயிற்சி பெருத நிலையில் உள்ளனர். இதனுல் புலிகளின் தாக்குதலுக்கு அவர்கள் இலகுவாக சிக்குகிறுர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. - சி

## கருப் புலி மாவீரர் படங்கள்

(யாழ்ப்பாணம்

43 கருப்புலி மாவீரர் போஸ்ரர் படங்கள், தமிழீழ மாவீரர் பணிமனை, பொற்பதி வீதி, கொக்குவிலில், சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 4-30 மணிவரையில் பெறமுடியும்.

# தாக்குதல்பற்றி ஊர்காவற்றுறைக்கு தொலைபேசியில் அறிவித்துக்கொண்டிருந்த கப்டனை புலிகள் சுட்டனர்

(கொழும்பு)

மண்டைதீவில் புலிகளின் தாக்குதலைப்பற்றி ஊர்காவற்றுறையிலுள்ள தனது படைத்தலைமையகத்தின் தளபதி பிரிகேடியர் சரத் பொன்சேகாவுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த கப்டன் கீர்த்திசிறி தர்மவர்த்தனவை புலிகள் சுட்டுக் கொன்றனர்.

இதுபற்றி 'சண்டேரைம்ஸ்' தெரிவிக்கையில்: மண்டைதீவினுள் நுழைந்த புலிகள் திடீர் தாக்குதலை நடாத்திக் கொண்டு முன்னேறி அதிகாரிகள் தங்கும் அலுவலகப்பக்கமாக வந்தனர். ஒரு அலுவலகத்தினுள் கிறனேட்டு லை வீசி சரமாரியாகத்துப்பாக்கிச் சூடு நடாத்தினர்.

மற்றொரு அலுவலகத்தினுள் கெமுனு வாச் 10ம் படைப் பிரிவின இரண்டாவது காமாண்டரான கப்டன் கீர்த்திசிறி தர்மவர்த்தன தாக்குதல் பற்றி ஆறுமைல் தூரத்திற்கு அப்பாலிருந்த ஊர்காவற்துறையில் அமைந்திருந்த இரண்டு ஏழு படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரியான பிரிகேடியர் சரத் பொன்சேகாவுடன் தொலைபேசியில் அறிவித்துக்கொண்டிருந்தார்.

அலுவலகத்தினுள் சென்ற புலிகள் கப்டனை சுட்டுக்கொன்றனர். இறந்த பின் இவர் உடனடியாக மேஜர் பதவிக்கு உயர்த்தப்பட்டு பின் லெப். கேணல் பதவி இராணுவ தளபதி ஜெரி டி. சில்வாவினுல் வழங்கப்பட்டது.

# தீர்வுத்திட்டத்தை கூறுமாறு பல கட்சிகள் நெருக்குதல்

[கொழும்பு]

அரசியல் தீர்வுத்திட்டத்தை வெளியிடுமாறு பொ. ச. மு. வில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனதிபதி சந்திரிகாவை வற்புறுத்தியுள்ளன,

வடக்கு கிழக்கில் அதிகாரப் பரவலாக்கல் தீர்மானம் செய்வதற்கு முதலில் அரசின் இத் தீர்வுத்திட்டம் கலந்தாலோசிக்கப்படவேண்டுப் என அக் கட்சிகள் வலியுறுத்திக் கூறியதாக 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தவிர்ந்த ஏனைய மக்கள் கூட்டணிக் கட்சிகளே இவ்வாறு ஜனதிபதி சந்திரிகாவுக்கு நெருக்குதல் கொடுத்துள்ளன. அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் இக்கட்சித் தலைவர்கள் மட்டத்தில் தீர்வுத்திட்டம் ஆலோசிக்கப்படவேண்டும் என அவை மேலும் கோரியுள்ளன.

இறுதித்தீர்வு முன்வைக்கப்படமுன்பு சகல அரசியல் கட்சிகளின் முழு ஆதரவையும் இத்தீர்வு குறித்துப் பெற்றபின்பே நாட்டுமக்கள்முன் இறுதியான இனப்பிரச்னைத் தீர்வு முன்வைக்கப்படவேண்டுமென அக்கட்சிகள் தமது கோரிக்கையில் மேலும் கேட்டுள்ளன.

[தீ-சி]

# இஸ்ரேலுடனை உறவை பி. எல். ஓ. எதிர்க்காதாம்

(கொழும்பு)

இலங்கை அரசு இஸ்ரேலுடன் தூதரக உறவை ஏற்படுத்துவதற்கு பலஸ்தீனிய விடுதலை இயக்கம் எதிர்ப்பு தெரிவிக்காதென இலங்கையின் வெளியுறவுச் செயலர் திரு. றொட்னி வன்டகாட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பலஸ்தீனிய விடுதலை இயக்கம் உத்தியோகபூர்வ செய்தி எதனையும் அனுப்பியுள்ளதா எனக் கேட்டதற்கு, நேரடியாக பதிலளிக்க மறுத்த திரு. வன்டகாட், அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதுகுறித்து பி. எல். ஓ. வின் ஆதரவை பெற்றிருப்பதாகக் கூறினுர்.

இதேவேளை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பி எல் ஓ. அதிகாரிகள், இஸ்ரேல்-இலங்கை உறவுகுறித்து தங்களுக்கு தலைமைப்பீடம் எதுவித செய்தியையும் தரவில்லை எனவும் கூறியுள்ளார்கள்.

இதற்கிடையில் இலங்கை அரசு இஸ்ரேலுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்துமானுல் அரசிலிருந்து விலகப்போவதாக யூன் 7ம் திகதி நாடாளுமன்றில் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. பின்னர் தாம் அப்படிக்கூறவில்லையென 'லங்காதீப' பத்திரிகைக்கு கூறியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சி

# படை முகாம்களுக்கு செல்ல பாதுகாப்பு வழங்குக

(கொழும்பு)

வட-கிழக்கு படை முகாம்களுக்கு விஜயம் செய்வதற்காக சகல எம். பிக்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு ஐ. தே. க எம். பி. யான டாக்டர் ஜெயலத்ஜெயவர்த்தன பிரதி பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பகுதியில் உள்ள படையினரின் நலன்களை அறிவதற்காக தாங்கள் படை முகாம்களுக்கு செல்லவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு எல்லைப் புற கிராமங்களுக்குச் சென்று அப்பகுதியிலுள்ள சிங்கள மக்களின் தேவைகளை அறியவும் தாங்கள் அங்கு செல்வதற்கு அனுமதிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். -சி

## கரும்புலிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு கூட்டம் முடிந்தபின் புறப்பட்டு தொட்டிலடிச் சந்தி- சீரணிச் சந்தி,- மானிப்பாய்ச் சந்தியை மாலை 5, 30க்கு அடைந்து அங்கும் கூட்டம் நிறைவுற யாழ். மானிப்பாய் வீதியூடாகச் சுதுமலை வீதியால் திரும்பித் தாவடிச் சந்தியை மாலை 6 மணிக்குச் சென்றடைந்து இங்கும் கூட்டம் நிறைவுற காங்கேசன் துறை வீதியூடாக உப்புமடம் சந்தி - மருதனூர் மடம் சந்தி- சுன்னுகத்தை அடைந்து அங்கு தரித்து நிற்கும்.

பின்னர் நாளை காலை 8 க்குச் சுன்னுகம் சந்தியில் கூட்டத்துடன் ஊர்வலம் ஆரம்பமாகிப் புத்தூர் வீதியூடாகப் புன்னலைக் கட்டுவன் சந்தியை காலை 8, 25க்கு அடைந்து பலாலி வீதியால் திரும்பி உரும்பராய் சந்தி- கோண்டாவில்சந்தி -திருநெல்வேலிச் சந்தியை காலை 9-25க்குச் சென்றடைந்து அங்கு கூட்டம் முடிவுற தொடர்ந்து சென்று கந்தர்மடம் சந்தி இலுப்பையடிச் சந்தி - ஆரியகுளம் சந்தியை மு. ப.9-50க்கு அடைந்து நடைபெறும் கூட்டத்தினைத் தொடர்ந்து பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் - கல்வியங்காடு - இருபாலை - 10-30க்குக் கோப்பாய்ச் சந்தியை அடைந்து கூட்டம் நிறைவுற தொடர்ந்து பருத்தித்துறை வீதி வழியாக - நீர்வேலி - சிறுப்பிட்டி புத்தூர்ச் சந்தியை மு. ப. 11-15 க்கு அடைந்து அங்கும் கூட்டம் முடிவுற தொடர்ந்து கரும்புலிநாள் பொதுக கூட்ட மைதானத்தைச் சென்றடையும். -இ

# புலிகளுக்கு எதிராகப் போராட 'மக்கள்படை' திரட்டும் ஐ.தே.க.எம்.பி.

[கொழும்பு]

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடாத்துவதற்காக ஐ. தே. க, எம். பி. யான திரு. மேவின் சில்வா தெற்கில் ஆட்களைத் திரட்டி 'மக்கள் படை' ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

ஒருவேளை அவ்வாறு ஆட்கள் திரட்டப்படும் பட்சத்தில் இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி இராணுவ பயிற்சி வழங்குமாறு தான் அரசிடம் கோரவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்;

ஆயுதப் படைகளில் சேருமாறு அரசு இளைஞர்களுக்கு விடுத்த அழைப்பை அடுத்து தான் இந்த முடிவுக்கு வந்ததாகவும் அவர் கூறினுர். எனினும் அரசு விடுத்த அழைப்பிற்கான பலன் மிகக் குறைவாகவே இருப்பதாகவும் அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினுர்,

தாம் விடுத்த அழைப்பை அடுத்து தனது தொகுதியான திஸமகாராகமவிலிருந்து இதுவரை ஆண்கள், பெண்கள் என 2000 பேரிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளதாகவும் தெற்கிலிருந்து 5000 பேரை ஜூலை மாத இறுதிக்குள் இப்போராட்டத்திற்குத் திரட்டுவதே தனது திட்டமெனவும் அதன் பின் அரசிடம் ஆயுத பயிற்சி உதவியைக் கோரவுள்ளதாகவும் தெரிவித்தார். சி

# தமிழில் பச்சை குத்தப்பட்ட சடலங்களே ஆற்றில் மிதக்கின்றன

(கொழும்பு)

தென்னிலங்கையில் மீண்டும் ரயர் போட்டு சடலங்கள் எரிப்பதுவும், ஆறு கடல் என்பவற்றில் சிதைக்கப்பட்ட சடலங்கள் ஒதுங்கும் நிகழ்வுகளும் ஆங்காங்கே தலைகாட்டி வருகின்றன.

இந்நிகழ்வுகள் மீண்டும் மக்கள்மத்தியில் பீதியைக்கிளப்பிவிட்டிருக்கின்றன. இந்தப்படுகொலைகள் பெரும்பாலும் இனவாதப் பின்னணியில் நிகழ்த்தப்படுபவையாகவும் படுகொலை செய்யப்பட்டவர்கள் தமிழர்களாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொல்கொடகங்கையில் மாத்திரம் இதுவரை 13 சடலங்களும், முகத்துவாரம்-நீர்கொழும்பு கரையோரங்களில் 9 சடலங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொல்கொட கங்கையிலிருந்து பிலியந்தலை பொலிசாரினால் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மூன்று சடலங்களில் ஒரு சடலத்தின் வலப்புறக்கையில் தமிழில் பச்சைகுத்தப்பட்டிருந்தது.

அச்சடலம் கை கால்கள் முறிக்கப்பட்டு முகம்சிதைக்கப்பட்டு விகாரப்படுத்தப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டுள்ளது. இந்த சடலங்கள் கிடைக்கப்பட்டிருக்கின்றபோதிலும் பிலியந்தல பொலிஸ் அதிகாரி 'அடையாளம் காணப்படாத சடலங்கள்' எனக்கூறி அச்சடலங்கள் பற்றிய விசாரணைக்கு முற்றுப்புள்ளிவைத்துள்ளார். சடலத்தில் தமிழில் குத்தப்பட்டிருந்த பச்சை தொடர்பாகக்கூட எவ்வித கவனமும் செலுத்தவில்லை.

தமிழில் பச்சை குத்தப்பட்டிருப்பதால் அவை தமிழரது சடலம் என இனங்காணமுடிகிறது. அப்படியாயின் ஏனைய சடலங்கள் யாருடையது?

சடலங்களைக் கொண்டு இனரீதியில் பகுத்தறிய முடியாவிட்டாலும் அண்மைய தென்னிலங்கைச் சம்பவங்கள் அனைத்தும் இவை தமிழரது சடலங்களாகத்தான் இருக்கக் கூடுமென நம்பவைக்கிறது.

ர-சி

## தங்களின் இறுதிச் சடங்கிற்கு நேரில் வந்த சிப்பாய்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மோதலில் பலியான இரு இராணுவத்தினரின் உடல்கள் அவர்களின் உறவினருக்கு அனுப்பப்பட்டு மரணச்சடங்குகள் நடைபெற்ற வேளையில் அந்த இரு இராணுவத்தினரும் அதே மரணச்சடங்கில் கலந்துகொண்ட சம்பவம் அண்மையில் கொழும்பு நடைபெற்றதாக ''வெரித்தாஸ்'' தெரிவித்தது.

இதுபற்றி ''வெரித்தாஸ்'' மேலும் தெரிவிக்கையில்: வடபகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் பலியான இரு இராணுவத்தினரின் சிதைந்த உடல்கள் சம்பந்தம் இல்லாத இரு இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டது.

அந்த இரு இராணுவத்தினரின் குடும்பங்களும் கதறிப் புலம்பிய வண்ணம் மரணச் சடங்குகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கையில், உண்மையான இரு இராணுவத்தினரும் தமது வீடுகளுக்கு விடுமுறையில் சென்றபோது இக்காட்சியைக் கண்டு திகைப்படைந்தனர்.

அந்த இரு இராணுவத்தினரையும் உயிருடன் கண்ட உறவினர் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தனர். (வி-கி

# கடற்புலிகள் பெறும் பயிற்சிகளால் கடற்படைக்கு ஆபத்தாம்

(சொழும்பு)

கடற்புலிகள் தற்போது பெற்று வரும் பயிற்சிகள் கடற்படையினருக்கு பெரும் ஆபத்துகளை விளைவிக்கலாமென 'சண்டேலீடர்' பாதுகாப்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: 1987ல் கடற்புலிகளை விடுதலைப்புலிகள் உருவாக்கினர் அப்போது அதில் பயிற்சி பெற்ற 15 புலிகளே இருந்தனர். இவர்கள் நீரினுள் சென்று கப்பல்களுக்கு குண்டுகளை பொருத்தக்கூடிய பயிற்சிகளை பெற்றிருந்தனர். தற்போது 'சூசை' தலைமையில் 2000ற்கும் மேற்பட்ட கடற்புலிகள் சகல துறைகளிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.

1990ன் பின் கடற்புலிகள் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு தற்போதுகிழக்கில் கூட 3 கடற்புலி முகாம்கள் இருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் இவர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்கப்படுகிறது. கடற்புலிகள் தற்போது கடற்புலி 'தற்கொலைப்படை' எனவும் கடற்கரும்புலிகள் எனவும் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது,

இந்த படைப்பிரிவுகள் கடற்பகுதியை அண்மித்துள்ள காடுகளில் நிலைகொள்ள வைக்கப்படவுள்ளன, இதன் மூலம் கடற்படையினரின் பாதைகளை இலக்கு வைத்து தாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான பயிற்சியை 400 பேர் வரையிலான ஆண் பெண் கடற்புலிகள் பெற்றுளனர்.

இவ்வாறு கடற்புலிகள் சகலவழிகளிலும் தமதுபடைபலம், தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்திருப்பது கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

## லொட்ஜிலிருந்த 2 தமிழர் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பு லொட்ஜில் தங்கியிருந்த இரு தமிழ் இளைஞர்கள் கடத்திச் செலலப்பட்டனர்.

ஜூன் 16ம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு கொழும்பு கிராண்ட்பாசிலுள்ள ஹென்லூட் லொட்ஜில் தங்கியிருந்த சுரேஷ், சிறிதரன் என்ற இரு இளைஞர்களுமே 'மஞ்சள் நிற வான் ஒன்றில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்,

நள்ளிரவு வேளையில் சிவில் உடையில் வந்த கோஷ்டி லொட்ஜில் தங்கியிருந்தோரை விசாரித்துவிட்டு இவ்விரு இளைஞர்களையும் கடத்திச்சென்றுள்ளது.

இக்கடத்தல் கோஷ்டியினர் ரி-56 துப்பாக்கி வைத்திருந்தனர் என்றும் இது அனேகமாக இராணுவம் பயன்படுத்தும் துப்பாக்கி என்றும் தெரியவருகிறது. அதேநேரம் இவர்கள முழுச்சிங்களத்திலேயே விசாரித்ததாகவும் இவர்கள் வந்த மஞ்சள் நிற வானின் இலக்கத்தகடு தெரியாவண்ணம் மறைக்கப் பட்டிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ர-சி

# படையினரை உற்சாகமூட்டும் அமைச்சர்களின் திட்டம் ரத்து

(கொழும்பு)

வவுனியா வந்து பாதுகாப்பு படையினரை சந்திக்க திட்டமிட்டிருந்த ஒன்பது அமைச்சர்களினதும் பயணம இறுதிநேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வவுனியாவுக்கு விஜயம்செய்து சகல படைமுகாம்களுக்கும் செல்வதெனவும் படையினரின் பதுங்கு குழிகளுக்கு சென்று அவர்களுக்கு உற்சாகமூட்டுவதெனவும் இந்த 9 அமைச்சர்கள் திட்டமிட்டிருந்தனர்.

எனினும் மண்டைதீவில் முதல் நாள் ஏற்பட்ட பேரழிவால் அமைச்சர்களின் இந்தப் பயணம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

சி-கி

## ஆனையிறவு ஷெல் வீச்சில் கால்நடைகள் பலி

(தாளையடி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் வீச்சினால் குஞ்சுப் பரந்தனில் நின்ற பத்து மாடுகள் துடி துடித்துப் பலியாகின.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குஞ்சுப் பரந்தன் அக்கரையில் இடம் பெற்றது.

யாழ் நகர் நோக்கி கொண்டு வருவதற்காக படகில் ஏற்றுவதற்கு குஞ்சுப் பரந்தனில கரையில் நின்ற மாடுகளே ஆட்லறி ஷெல் வீச்சில் பலியாகின.

இதேவேளை ஆனையிறவு வெற்றிலைக் கேணி இராணுவ முகாம்களில் இருந்து கடந்த ஞாயிறு மாலை ஐந்து மணி தொடக்கம் குடிமனைப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஒரு மணி நேரம் ஷெல் வீச்சு இடம்பெற்றது.

இராணுவ முகாம்களில் இருந்து ஏவப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட ஷெலகள் உடுத்துறை, வத்திராயன் தெற்கு குடிமனைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. கூடுதலான ஷெல்கள் கடலிலும் கடல் நீர் ஏரிப்பகுதியிலும் விழுந்து வெடித்தன.

160- 163- கி

## வன்செயல் பாதிப்புக்கான விசேட புள்ளிச்சலுகை ரத்து

(கொழும்பு)

இராணுவ மற்றும் வன்செயல்களில் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் அரசாங்க வேலை வாய்ப்புக்கள் தேடுமிடத்து போட்டிப் பரீட்சைகளின் போது அவர்களுக்கு விசேடமாக அளிக்கப்பட்டு வந்த புள்ளிச் சலுகையை இல்லாதொழிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இனிவருங்காலங்களில் அரசாங்க சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் போது திறமை மற்றும் இன விகிதாசாரம் என்பவற்றை மட்டுமே கருத்திலெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

-கி

### பாரிய தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவுத்ததாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

சி- கி

### வடமராட்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி, வல்வெட்டத்துறை, ஆதிகோவிலடி கடற் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் மீது பீரங்கி, கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்

வல்வெட்டித் துறையில் ஆரம்பிக்கப்பட்ட இத் தாக்குதல் கற்கோவளம் வரை இடம்பெற்றது.

ஆதிகோவிலடியைச் சேர்ந்த இரு மீனவர்களின் கட்டுமரம், அதன் இழுவை இயந்திரங்கள் என்பன சுக்குநூறானதுடன் மீனவரான திலலையம்பலம் ரங்கநாதன் (வயது 19) ஒரு பிள்ளையின் தந்தை காணமற்போயுள்ளார். இவர் பற்றிய விபரம் நேற்று மாலை வரை தெரியவில்லை. இவருடன் சென்ற மற்றொரு மீனவரான துரைசாமி சிவலிங்கம் (வயது 23) கடலில் குதித்து நீந்தி பின் ஏனைய மீனவர்களால் ஆபத்தான நிலையில் மீட்டு வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். ஆதி கோவிலடி கற்கோவளம் பகுதியில் நடந்த கடற்படைத் தாக்குதலில் அதே இடத்தைச் சேர்ந்த துரைராஜா ரூபன் என்பவரது மீன் பிடி வலைகள் படையினரால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இவ் விடயமாக ஆதிகோவிலடி மீனவர் சங்கமும் வடமராட்சி கிழக்கு மீனவர் தாய்ச் சங்கமும் யாழ் அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றிற்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி உள்ளன.

51- 160- கி

## க. பொ. த. பரீட்சைக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும் க. பொ. த [சாதாரண] பரீட்சைக்கு தோற்ற விரும்பும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்று யாழ். பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு ஐந்து பாடத்துக்கு மேல் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் ஐம்பது ரூபா பணத்தை செலுத்தி யாழ். பிரதமதபாலகத்திலோ அல்லது உபதபால் நிலையங்களிலோ பற்றுசீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

யூலை 31ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சார்த்திகள் பாடத்துக்குரிய கட்டணங்களை செலுத்தி பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுமாறும் பிரதம தபாலதிபர் கேட்டுள்ளார்.

170-கி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ரூயல் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் வருமாறு;

சென். அன்ரனீஸ் எதிர் யங்கென்றீஸ், சென். மேரிஸ் எதிர் பொற்பதி

சி- கி

●

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் ஆதரவுடன் வலிகிழக்கு விளையாட்டுக் கழகங்களிடையே யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீட மைதானத்தில் இன்று நடைபெறும் உதைபாந்தாட்டப் போட்டியின் விபரம்:

முதல் ஆட்டத்தில் பாடுமீன் எதிர் அரியாலையும் 2 வது ஆட்டத்தில் டயஸ் எதிர் கவி.

வி-கி

## சிறுவர் பூங்கா மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

நாளை கரும்புலிகள்தினத்தை முன்னிட்டு கேணல் கிட்டு சிறுவர் பூங்கா மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

கி

## கல்யாணி வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி மற்றும் நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு லங்கா கல்யாணி கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

162-170-கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.